கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
கலைகலாசார பீடம் முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு பொது கலைமாணித் தேர்வு
2015/2016 (May - 2018)

**PY- 1212 – பாரம்பரிய அளவையியல் வரலாறு மற்றும் அடிப்படை எண்ணக்கரு**
**(HISTORY AND BASIC CONCEPTS OF FORMAL LOGIC)**

நேரம் : 02 மணித்தியாலம்

பகுதி I இல் இரு வினாக்களையும் பகுதி- II இல் இரு வினாக்களுமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

## பகுதி-I

1. I எடுப்பு முரண்பாட்டு அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் எடுப்புக்களின் உண்மைப் பெறுமானங்களைத் தீர்மானிக்குக.

அ) மிருகங்கள் புல் உண்பவை அல்ல என்ற எடுப்பு உண்மையாக இருந்தால்

(I) சில மிருகம் புல் உண்பவை அல்ல
(II) மிருகங்கள் எல்லாம் புல் உண்பவை
(III) சில மிருகங்கள் புல் உண்பவை
(IV) மிருகங்கள் உள

(4 × 1 = 04 புள்ளிகள்)

II அனுபவத்தில் உண்மை காண முடியாத எடுப்பினை எடுப்பு முரண்பாட்டு சதுரத்தில் பிரயோகிக்கும் போது எழும் பிரச்சினைகளை மொழிநடை உதாரணந் தந்து விளக்குக.
(09 புள்ளிகள்)

III வெளிப்பேற்று அனுமானத்தின் அடிப்படையில் பின்வரும் வாதங்களின் வாய்ப்பினைத் துணிக .

அ) பொருட்கள் விலை அதிகம் இல்லை ஆகவே பொருட்கள் அல்லாதவை விலை அதிகம்.

ஆ) பண்பற்றவர்கள் எல்லோரும் அன்பானவர்களாகும் ஏனெனில் அன்பற்றவர்கள் எல்லோரும் பண்பானவர்கள் அல்ல என்பதனாலாகும்.

இ) காட்டு விலங்குகள் எல்லாம் வேகமாக ஓடுகின்றன என்பதிலிருந்து வேகமாக ஓடாத காட்டு விலங்குகள் அல்லாதன என்பதைப் பெற முடியும்

ஈ) ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் அறிஞர்கள் அல்ல ஆகவே சில அறிஞர்கள் ஆசிரியர்கள் அல்ல

(4 × 3 = 12 புள்ளிகள்)

2. I பின்வரும் வாதங்களை நியாயத்தொடை அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் வாய்ப்பு, வாய்ப்பின்மையினைத் தீர்மானிக்குக. வாதம் வாய்ப்பற்றதாயின் மீறப்பட்டுள்ள விதி, விதிகளையும், போலிகளையும் குறிப்பிடுக.

அ) ஒவ்வொரு குழந்தையும் அழகாகச் சிரிக்கின்றது. யார் அழகாகச் சிரிக்கின்றாரோ அவர்கள் பொறாமை கொண்டவர்கள் அல்ல. ஆகவே பொறாமை கொண்டவர்கள் எவரும் குழந்தைகள் அல்ல.

ஆ) புலிகளைப் போல் சிங்கம் புல் உண்ணாததால் எந்தச் சிங்கமும் புலியல்ல.

இ) வைத்தியர்கள் நோயாளி ஆவர் ஏனெனில் நோயாளிகளும் வைத்தியர்களும் வைத்தியசாலை செல்வதனாலாகும்

ஈ) எல்லா நடிகர்களும் நடிகைகளும் புகழ் பெற்றவர்கள் அல்ல. ஆகவே எந்த நடிகையும் நடிகன் அல்ல

(4 × 5 = 20 புள்ளிகள்)

II பேரெடு கூற்று குறையாகவும் சிற்றெடு கூற்று மறையாகவும் இருப்பின் ஏன் வலிதான முடிவை பெற முடியாது என்பதை நியாயத்தொடை அனுமானத்தின் பிரதான விதிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(05 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பெழுதுக.

(I) நியாய மாலை

(II) குறை நியாயத்தொடை

(III) உருக்களும் பிரகாரங்களும்

(IV) சிந்தனை விதிகள்

(V) பதங்களின் வியாப்தி

(5 × 5= 25 புள்ளிகள்)

## பகுதி II

4. அளவையியல் என்றால் என்ன? என விளக்கி அதன் வரலாற்று ரீதியான வளர்ச்சியினையும் அதன் சமகால செல்நெறிப் போக்கினையும் ஆராய்க.

(25 புள்ளிகள்)

5. I கீழ்வரும் வாதங்களை வகுப்புக்களின் அடிப்படையில் குறியீட்டில் தந்து வென்வரைபடத்தின் மூலம் அவற்றின் வாய்ப்பினைத் துணிக.

அ) எந்த மனிதனும் சூரியனைத் தொட்டதில்லை அத்துடன் சூரியனைத் தொட்டவர்கள் எவரும் உயிரோடு இருந்ததில்லை. ஆகவே எவர் ஒருவர் மனிதராக இருக்கின்றாரோ அவர் உயிருடன் இருந்ததில்லை.

ஆ) கிட்லர் வன்முறையாளன். ஏனெனில் எல்லா வன்முறையாளர்களும் மாணவர்களாக இருப்பதனாலும் கிட்லர் ஒரு மாணவன் என்பதனாலுமாகும்.

இ) மாணவர்கள் ஒழுக்கமாக இருக்க சில வயோதிபர்கள் அவ்வாறிருப்பதில்லை. ஆகவே வயோதிபர்கள் மட்டுமே மாணவர்கள்

(3 x 3= 09 புள்ளிகள்)

II வென்வரைபடம் தொடர்பான பின்வரும் எண்ணக்கருக்களை விளக்குக.

I உரையாடல் உலகு
II உப வகுப்பு
III அங்கத்துவ வகுப்பு

(3 x 3= 09 புள்ளிகள்)

III நியாயத்தொடை அனுமானத்தில் வாய்ப்பாக இருக்கும் ஒரு வாதம் வென்வரைபடத்தில் வாய்ப்பற்றதாக இருக்கும் சந்தர்ப்பம் ஒன்றை உதாரணம் மூலம் விளக்கி அவ்வாதத்தின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுக.

(07 புள்ளிகள்)

6. I பின்வரும் நியமமில் போலிகளை இனங்கண்டு அப்போலி இடம்பெற்றுள்ள விதத்தினை விளக்குக.

அ) இந்தப் புத்தகம் பாரமானது. ஆகவே இப்புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமும் பாரமானதாகும்.

ஆ) பிரமச்சாரிகள் திருமணமாகாதவர்கள்

இ) திருடர்கள் கவனம்

(3 x 5 = 15 புள்ளிகள்)

II மொழி ஒப்புவமைப் போலியினை உதாரணம் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)